

தி.மு.க. செய்தித் தொடர்பு தலைவரும் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு, அவருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். உடன் கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

## கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

சூழலை மேம்படுத்த தமிழ்நாடு அரசின் பல்வேறு முயற்சிகளை கோடிட்டுக் காட்டியதோடு, தமிழ்நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி மற்றும் அவர்களின் திறன் வளர்ச்சி குறித்தும், தொழில்துறை, வீட்டுவசதி மற்றும் போக்குவரத்து தளவாட வசதிகள் போன்றவற்றில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருவது குறித்தும் எடுத்துரைத்தார். எதிர்காலத்தில் இதனை மேலும் வலுப்படுத்தி, ஆசியாவின் உற்பத்தி மையமாக தமிழ்நாட்டை உருவாக்க இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாக அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் விளங்கும் தமிழ்நாட்டில் ஆப்பிள் நிறுவனம் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

**கூகுள் நிறுவனம்**

கூகுள் நிறுவனம் செயற்கை நுண்ணறிவு, ஆன்லைன் விளம்பரம், தேடுபொறி தொழில்நுட்பம் (Search Engine Technology), கிளவுட் கம்ப்யூட்டிங், கணினி மென்பொருள், குவாண்டம் கம்ப்யூட்டிங், இகாமர்ஸ் மற்றும் நுகர்வோர் மின்னணுவியல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் தொழில்நுட்ப நிறுவனமாகும். கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பாபெட் (Alphabet) அமெரிக்க பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும். கூகுள் நிறுவனத்தின் தலைமையகம் கலிபோர்னியாவின் மவுண்டன் வியூவில் அமைந்துள்ளது.

**கூகுள் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, தமிழ்நாட்டில் AI ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூகுள் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை மவுண்டன் வியூ வளாகத்தில் சந்தித்த போது, தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பிக்சல் 8 போன்கள் உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும், கூகுள் நிறுவனத்தின் பிற தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை தமிழ்நாட்டில் தொடங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், ஸ்டார்ட்அப்கள், தொழில்துறை சுற்றுச்சூழல் இயக்கம் மற்றும் எதிர்காலத்திற்கான திறன் ஆகியவற்றில் AI கண்டுபிடிப்புகள் மூலம் வளர்ச்சியை அதிகரிப்பது குறித்தும் பேசினார்.

இந்தியாவின் மிகப்பெரிய திறன் மேம்பாட்டு முயற்சியான 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ், கூகுளுடன் இணைந்து எதிர்காலத்தில் 2 மில்லியனுக்கும் அதிகமான இளைஞர்களை அதிநவீன AI திறன் வளர்ச்சியுடன் தயார்படுத்த தமிழ்நாடு தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், கூகுள் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனமும் இணைந்து தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்களை நிறுவுவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து அழைப்பு விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் Linkedin முதன்மை செயல் அலுவலர் யான் ரோஸ்லான்ஸ்கி (Mr. Ryan Roslansky) மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, டேட்டா சென்டர் விரிவாக்கம், Global Capability Centre (GCC) மற்றும் AI திறன் முயற்சிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகளில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து பேசினார்.

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக

# சென்னையை உருவாக்கிய முதல்வர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து - பாராட்டு!

### ஃபார்முலா கார் பந்தயத்தையொட்டி கலைஞானி கமலஹாசன் – இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து!

சென்னை, செப்.1-

ஃபார்முலா - 4 கார் பந்தயம் சென்னையில் நடத்தப்படுவதையொட்டி கலைஞானி கமலஹாசன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட திரையுலகினர் வாழ்த்து செய்தியில் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

**கலைஞானி கமலஹாசன்!**

இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கலைஞானி கமல்ஹாசன் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கமல்ஹாசன் வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில், "சென்னையில் நடைபெறவுள்ள ஃபார்முலா 4 கார் பந்தய திருவிழா பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக சென்னையை உருவாக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்!**

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

சென்னையில் நடைபெறவிருக்கும் ஃபார்முலா 4 தெருப் பந்தயம் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகத் தயாராக உள்ளது, இது நாட்டிலேயே முதல் முறையாகும். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்த அசாதாரண ஃபார்முலா 4 தெருப் பந்தயத்தை சென்னையில் கொண்டு வந்து இந்தியர்களுக்கு உற்சாகம் சேர்த்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

**நடிகர் தனுஷ் வாழ்த்து!**

நடிகர் தனுசும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், இந்தியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் எஃப் 4 சேம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பின் கீழ் நடைபெறும் இந்தப் பந்தயம், சென்னையின் அந்தஸ்தை உயர்த்தி, இந்தியாவை ஒரு முக்கிய விளையாட்டு நிகழ்வுகளுக்கான மையமாக மாற்றும் என்று நடிகர் தனுஷ் தெரிவித்துள்ளார்.

**நடிகர் சிவகார்த்திகேயன் வாழ்த்து!**

இது குறித்து, நடிகர் சிவகார்த்திகேயன் தனது எக்ஸ் தள பக்கத்தில் ஃபார்முலா கார் பந்தயத்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். யுவன் இசையமைத்துள்ள கார் பந்தயம் குறித்த முழு தீம் பாடலையும் யூடியூப் லிங்குடன் பகிர்ந்து மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில், தெற்காசியாவின் முதல் ஆன் ஸ்ட்ரீட் நைட் ஃபார்முலா சாம்பியன்ஷிப்பை சென்னையில் நடத்துவதற்கு வாழ்த்துகள். இந்த முயற்சி வெற்றியடைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நடிகர் கார்த்தி வாழ்த்து!**

இது தொடர்பாக நடிகர் கார்த்தியும் பதிவிட்டுள்ளார். நம்முடைய சென்னையில் ஃபார்முலா கார் ரேஸ் நடைபெறுகிறது. இந்த விளையாட்டுக்கு தைரியம், திறன், துடிப்பான இளமை ஆகியவை முக்கியம். நமது துடிப்பான மெட்ராஸுக்கு இந்த கார் ரேஸ் மிகச்சிறந்த பொருத்தம். இந்த துணிச்சலான முயற்சியை கையில் எடுத்து தமிழ்நாட்டில் மோட்டார் விளையாட்டு வரலாற்றை உருவாக்குவதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

### பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும்

# கடனுதவித் திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

### தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், செப். 1 -

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (6T) கா.காஜா முகைதீன் தலைமையில் மேலாண்மை இயக்குநர் திரு.தி.என்.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் 29.08.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தனிநபர் கடன், கறவை மாட்டுக் கடன், சுய உதவிக் குழு கடன், நீர்ப்பாசனக் கடன் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடனுதவித் தொகை விவரங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் குறித்தும் அதிகாரிகள் விளக்கினார்கள்.

இந்த ஆய்வில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்தார்கள்.

முன்னதாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் தி.என்.வெங்கடேஷ், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சரபோஜி அரசு கல்லூரி மாணவர் விடுதி (பி.ந) க்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக தள ஆய்வு மேற்கொண்டு கட்டுமானத்திற்கான திட்ட மதிப்பீட்டினை ஆய்வு செய்தார்.

மேலும், அம்மாபேட்டையில் ரெஜினாஸ்லி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் உக்கடை அப்பாவிதேவர் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நேரில் சென்று மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மிதிவண்டிகள் பொருத்தும் பணிகளை ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), க. அன்பழகன் (கும்பகோணம்), என்.அசோக் குமார் (பேராவூரணி), முனைவர். எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), மாநகராட்சி மேயர்கள் சண்.ராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.சுதா ராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் கா.காஜா முகைதீன் தலைமையில் மேலாண்மை இயக்குநர் தி.என்.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம் முன்னிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் 29.08.2024 அன்று நடைபெற்றது. தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு). டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்). க.அன்பழகன் (கும்பகோணம்), என்.அசோக்குமார் (பேராவூரணி), முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்),மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர்தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! சிவகங்கை மாவட்ட மகளிரணி அமைப்பாளர்

# பவானி கணேசன் இல்லத் திருமணம்! கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - பி.மூர்த்தி - சா.சி.சிவசங்கர் - சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை! மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, செப். 1-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் - மு.செ.கணேசன் ஆகியோரின் புதல்வி மு.செ.க.எழில் நிலா - பி. ரோகித்ராஜ் ஆகியோரின் திருமணம், செப்டம்பர் 8 - ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகங்கை மாவட்டம் - ஒக்கூரில் நடைபெறுகிறது.



சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

இம்மணவிழாவிற்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, பி.மூர்த்தி, சா.சி.சிவசங்கர், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு:-

சிவகங்கை மாவட்ட தி.மு.க. மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் -சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் மு.செ. கணேசன் ஆகியோரின் மகள் ஹரிணி என்ற எழில்நிலா - பெரம்பலூர் மாவட்டம் பசும்பலூர் ரா. பிச்சப்பிள்ளை - பி. விஜயா ஆகியோரின் மகன் ரவிசங்கர் என்ற பி.ரோஹித் ராஜ் ஆகியோரது திருமணம் 8.9.2024 - ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் சிவகங்கை மாவட்டம் - ஒக்கூர் - அண்ணா நகரில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை வடக்கு ஒன்றியச் செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர்கள் எஸ். ரகுபதி, பி. மூர்த்தி, சா.சி.சிவசங்கர் சிவ.வீ. மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாநில மகளிரணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி, முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சிவகங்கை நகர் மன்றத் தலைவர் சி.எம். துரை ஆனந்த், சிவகங்கை தெற்கு ஒன்றியச் செயலாளர் ம.ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., திருமதி. பிரேமா பெரியகருப்பன், கே.கே.செல்லப்பாண்டியன், தா.சேங்கைமாறன், இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், பவானி ராஜேந்திரன், அ.கணேசன், எஸ்.மாங்குடி, எம்.சின்னத்துரை, ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம்.மணிமுத்து, எஸ்.குணசேகரன், சுப. துரைராஜ், நாகனி பி.செந்தில்குமார், வி.ராஜசேகரன், சுப.மதியரசன், உடையப்பா சுப்பிரமணியன், கே.மாரியப்பன் கென்னடி, தா.ராமையா, புதுக்கோட்டை விஜயா, கதி. ராஜ்குமார், சல்மா அப்துல் மாலிக், ச.இன்பலாதன், மருத்துவர் ப.மீ.யாழினி, சேலம் சுஜாதா உள்பட பலரும் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

## வாட்ஸ்-அப்பில் வலம் வருகிறது!

